## மே - 29

**"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன் என்னுடைய சமாதானத்தை உங்களுக்கு கொடுக்கிறேன். உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக." - யோவா 14 : 27**

எவ்வளவு அதிகமாய் நாம் உலகத்தையும் மாம்சத்தையும் பிசாசையும் ஜெயிக்கிறோமோ, அவ்வளவாய் பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற நாம் நாடுகிறோம். எவ்வளவு அதிகமாய் நமது பிரியமீட்பரின் அந்நியோந்நியத்திற்காகவும் ஐக்கியத்திற்காகவும் வாஞ்சித்து நாடுகிறோமோ, அவ்வளவாய் அவருடைய பார்வையில் எவைகள் பிரியமானவைகளாயிருக்கின்றனவோ அவைகளையே செய்ய நாம் நாடுகிறோம். அவ்வளவு அதிகமாய் நாம் சந்தோஷத்தையும், சமாதானத்தையும், பெற்றிருப்போம். இவைகளை ஒரு மனிதனும் நம்மிடமிருந்து எடுத்துக்கொள்ள முடியாது. இவைகளை சோதனைகளும் கஷ்டங்களும் உபத்திரவங்களும் அதிக இனிமையானவையாகவும், மதிப்பு மிக்கதாகவும், மாத்திரம் செய்யும். "அது போல" நீங்களும் இப்பொழுது துக்கமடைந்திருக்கிறீர்கள். நான் மறுபடியும் உங்களை காண்பேன், அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும். உங்கள் சந்தோசஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப் போடமாட்டான். யோவா 16 : 22.

**- Z ’97, 306 (R 2230).**

இருதயத்தின், மனதின் ஓய்வே சமாதானம் ஆரம்பத்தில் இது கிறிஸ்துவின் புண்ணியத்தின் மூலமாக நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு தேவனோடு நமக்கு சமாதானம் கொடுக்கப்படுகிறது என்ற உணர்விலிருந்து எழும்புகிறது. இரண்டாவது, பரிசுத்தமாக்கப்படுதலில் இது தேவனுடைய நல்மனதோடு நமக்கிருக்கிற இணக்கத்தின் உணர்விலிருந்து எழும்பி, தேவ சமாதானத்தைக் கொடுக்கிறது. இது இரு அர்த்தங்களிலும், நமது இருதயத்திலிருந்து இதைத் துரத்திவிட எதையாவது அனுமதிக்கக் கூடாது. ஆனால், தேவனோடும் தேவனிலும் ஓய்வில் நிலை கொள்ள வேண்டும். **- P '30, 78.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

யோபு 34:29; சங் 4:8; 25:12,13; 85:8; 119:165; 125:1; நீதி 3:17,24; ஏசா 26:3; 28:12; 32:2,17,18; 53:5; மத் 11:28-30; யோவா 16:33; ரோம 5:1; 8:6;14:17; 15:13,33; எபே 2:14,17; பிலி 4:6,7,9; கொலோ 3:15; 2தெச 3:16.

**கோபுர வாசிப்பு : Z ’11, 150 (R 4817)**

**வினாக்கள்:** இந்த வாரத்தில் நான் முற்றிலும் கர்த்தருக்குள் இளைப்பாறினேனா? எந்தச் சந்தர்ப்பங்களில்? எது உதவியாயிருந்தது? எது இடையூறாயிருந்தது? பலன்கள் என்ன?